# தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும அறிவிப்பு

தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைக்கான 10,500 உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான எழுத்துத் தேர்வு வரும் 10.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு 31 மாவட்டங்களிலும் மற்றும் 6 மாநகரங்களிலும் நடைபெறவுள்ளது. எழுத்துத் தேர்வில் கலந்துகொள்வதற்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் பெயர் மற்றும் பதிவெண்கள் தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழும இணைய தளம் www.tnusrb.tn.gov.in மற்றும் காவல்துறை இணையதளம் www.tnpolice.gov.in ஆகியவற்றில் வெளியிடப்பட்டுள்ளன. எழுத்துத் தேர்வில் கலந்துகொள்வதற்கான தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் அவரவர் விண்ணப்பித்த மாவட்ட / மாநகர தலைமை அஞ்சலகம் மூலம் அனுப்பப்பட்டுள்ளன. தேர்வு தினத்திற்கு முன்பாக அழைப்புக் கடிதம் கிடைக்கப்பெறாத தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் அவர் விண்ணப்பித்துள்ள மாவட்ட / மாநகர காவல் அலுவலகத்தில் 07.11.2013 தேதி முதல் 09.11.2013 தேதி 5.00 மணி வரை நேரில் சென்று அழைப்புக் கடிதத்தின் நகலை பெற்றுக்கொள்ளலாம். மேலும் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ சென்று அழைப்புக் கடிதத்தினைப் பெறத் தவறிய தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தான் விண்ணப்பித்துள்ள மாவட்டம் அல்லது மாநகரத்தை தேர்வு செய்து அதில் தன் பெயர் அல்லது தந்தை பெயர் அல்லது தனது பிறந்த தேதி (dd/mm/yyyy) முறையில் Ctrl.+F பயன்படுத்தி தங்களுடைய பதிவு எண் மற்றும் தேர்வு மைய விவரங்களை உறுதிசெய்து கொண்டு எழுத்துத் தேர்வு தினத்தன்று உரிய தேர்வு மையத்திற்கு சென்று இத்தேர்வுக்கு விண்ணப்பித்ததற்கான விண்ணப்பத்தின் நகலையும் மற்றும் சான்றாவணங்களையும் தேர்வு மைய அதிகாரியிடம் சமர்பித்து தேர்வினை எழுதலாம் எனத் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

காவல் துறை இயக்குநர் / தலைவர்,
தமிழ்நாடு சீருடைப் பணியாளர் தேர்வுக் குழுமம்,
சென்னை -2